முருகப்பெருமான் துணை

**மகான் நகுலன் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.09.2022, வியாழக்கிழமை

1. தருமசக்தியே அரங்கா வாழ்க
தரணி காத்திடும் அம்சமாக
ஆறுமுகனார் அவதாரமாக வந்த
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது யாளி திங்கள்
குறையிலா மூவேழீர் திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 23 நாள், 08.09.2022 வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு நகுலன் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான தருமவழி காட்டும்
ஞானதேசிகன் தலைமை தன்னை
ஞானவழி குருவாக ஏற்று மக்கள்
4. மக்களெல்லாம் அரங்கனை நாடி
மகாமந்திர தீட்சை ஏற்று
தேக்கமின்றி ஞானம் பயில
தேசிகன் வழி தருமம் தனை தொடர
5. தொடரவே மக்களிடை மேல்நிலை
தேசிகன் மூலம் தேற்றமாகி
இடரை வெல்லும் பலமும்
இணையிலா தெய்வ அனுகூலமாகி
6. ஆகியே உலகோர் சிறப்பர்
அகிலம் வெல்லும் ஆற்றல் கூடி
அகிலமதை மாற்றும் சக்தி பெறுவர்
அரங்கன் படைக்கும் கலியுகத்தின்
7. கலியுகத்தின் ஞானிகள் ஆகி
கந்தப் பெருமான் கருணைபட
அழியாமை உள்ளமக்கள் ஆக
அகிலத்தில் ஞான ஆட்சிபடைப்பர்
8. படைப்பரே ஞான சபைதன்னை
பாமரரும் ஞானம் பெறும் வண்ணம்
தடையற ஞான ஒளி ஏற்றி
தருமமோடு கூடிய வரைமுறையை
9. முறையாக யாவரும் பின்பற்ற
முழுமையான வழிகாட்டலாக்கி
குறைவிலா நல்லுலகம் தன்னை
குருபரன் ஆட்சியாக வழி நடத்திடுவர்

10. நடத்திட இந்தவித அற்புதம் நோக்கி
நகர்ந்திட இந்த கலியுகம் தானும்
இடரின்றி அரங்கமகான் அவதார
இணையில்லா சேவையால் மாற்றம்

11. மாற்றம் உலகம் சடுதி காணும்
மார்க்கமுடன் ஞானயுகம் ஆகி
ஆற்றல்பட ஞான ஆட்சி மலரும்
அறிவித்த அருளாசி முற்றே

–சுபம்–